www.kalvisolai.com

# BHARATHI STUDY CENTRE
# TRICHY/MADURAI.
# 9894274672 ; 8682084318

வகுப்பு: ஆறு

<u>திருவருட்பா</u>: எழுதியவர்: இராமலிங்க அடிகளார்.

கடலூர் மாவட்டம் மருதூரில் பிறந்தார். பெற்றோர் இராமையா-சின்னமையார். சிறப்பு பெயர்: திருவருட்பிரகாச வள்ளலார். காலம்: 5-10-1823 முதல் 30-1-1874 வரை. நூல்கள்: ஜீவகாருண்ய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம்.

- மக்களுக்கு பசிபோக்க சத்தியதருமசாலை அறச்சாலையையும், வடலூரில் அறிவுநெறி விளங்க ஞானசபையையும், அனைத்து மதங்களின் நல்லிணக்கத்திற்காக சன்மார்க்க சங்கத்தையும் நிறுவினார்.
- வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய மனம் கொண்டவர்.
- வள்ளலார் பாட்டை ''மருட்பா'' என்று கூறியவர் ஆறுமுக நாவலர்.
- இவர் கடவுளை ''கண்ணில் கலந்தான் கருத்தில் கலந்தான்'', என்றும் ''உயிரில் கலந்தான் கருணை கலந்து'' என்றும் பாடினார்.

## திருக்குறள்

இயற்றியவர்: திருவள்ளுவர்.

- இவரது காலம் கி.மு.31.
- சிறப்பு பெயர்கள்: செந்நாபோதார், தெய்வப்புலவர், நாயனார், முதற்பாவலர், பொய்யில்புலவர், நான்முகனார், பெருநாவலர், மாதானுபங்கி, தேவர்.
  குறிப்பு: திருவள்ளுவர் ஆண்டு: கிறித்துவ ஆண்டு +31 [எ.டு] 2012 என்பது திருவள்ளுவர் ஆண்டில் (2012+31) 2043 என்று கூறுவோம்.
- திருக்குறளின் 3 பிரிவுகள்:
  அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்.
- பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- 133 அதிகாரங்கள் - அதிகாரத்திற்கு 10 பாடலகள் மொத்தம் 1330 குறட்பாக்கள்.
- திருகுறளுக்கு 10 பேர் உரையெழுதியுள்ளனர். அவற்றில் சிறந்நது பரிமேலழகர் உரை.

- <u>திருகுறளின் சிறப்பு பெயர்:</u>
  முப்பால், பொதுமறை, தமிழ்மறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, உத்திரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், பொருளுரை, முதுமொழி, திருவள்ளுவபயன்.
- <u>பொருள்:</u>
  என்பு - எலும்பு, வழக்கு – வாழ்க்கைநெறி, வையகம் - உலகம், ஆர்வலர் - அன்புடையர், நண்பு – நட்பு, மறம் - வீரம், வற்றல்மரம் - வாடியமரம், புன்கணீர் - துன்பம் கண்டு பெருகும் கண்ணீர்.

## <u>தமிழ்தாத்தா உ.வே.சா.</u>

- உ.வே.சா – உத்தமதானபுரம் வேங்கடசாப்பையர் மகன் சாமிநாதன்.
- உத்தமதானபுரம் - திருவாரூர் மாவட்டத்தில் உள்ளது. இங்கு தான் அவரின் நினைவு இல்லம் உள்ளது.
- இயற்பெயர்: வேங்கடரத்தினம், அவரது ஆசிரியர் அவருக்கு சூட்டிய பெயர் சாமிநாதன்.
- அவரது ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை.
- காலம்: 19-2-1855 முதல் 28-4-1942 வரை
- உ.வே.சா-வின் வாழ்க்கை வரலாற்று நூல் ''என் சரிதம்'' (ஆனந்த விகடனில் தொடராக வெளிவந்தது)
- இவர் பெயரால் சென்னை பெசன்ட் நகரில் 1942-ல் நிறுவப்பட்ட நூல் நிலையம் இன்றும் செயல்பட்டு வருகிறது.
- இவர் ஓலைச்சுவடிகளை பதிப்பித்ததால் பதிப்புத்துறையின் வேந்தர் எனப்படுகிறார்.
- சங்கராச்சாரியார் இவருக்கு தட்சணாமூர்த்தி கலாநிதி என்று பெயர் வழங்கினார்.
- ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொடுமுடியில் ஆற்றில் விடப்பட்ட ஓலைச்சுவடியை எடுத்து படித்து புதுப்பித்தார்.
- கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் 99 வகையான பூக்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.
- உ.வே.சா-வின் தமிழ் பணிகளை பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள் ஜி.யு.போப், சூலியல் வின்சோன்.

BHARATHI STUDY CENTRE

BHARATHI STUDY CENTRE
TRICHY/MADURAI.
9894274672 ; 8682084318

- 2006-ம் ஆண்டு நடுவண் அரசு உ.வே.சா.வைப் பெருமைப்படுத்த அஞ்சல் தலை வெளியிட்டது.

- உ.வே.சா. பதிப்பித்த நூல்கள்:

| | | | |
|---|---|---|---|
| எட்டுத்தொகை | 8 | தூது | 6 |
| பத்துப்பாட்டு | 10 | வெண்பா நூல்கள் | 13 |
| சீவக சிந்தாமணி | 1 | அந்தாதி | 3 |
| மணிமேகலை | 1 | பரணி | 2 |
| சிலப்பதிகாரம் | 1 | மும்மணிக்கோவை | 2 |
| புராணங்கள் | 12 | இரட்டைமணிமாலை | 2 |
| உலா | 9 | பிற பிரபந்தஸ்கள் | 4 |
| கோவை | 6 | | |

- ஓரிகாமி என்பது காகிதத்தில் உருவங்கள் செய்யும் கலை.
- ஜப்பானியர் வணங்கும் பறவை – கொக்கு.
- ஜப்பானில் அணுக்கதிர் வீச்சால் பாதிக்கப்பட்டு இறந்த பெண் - சடகோ சசாகி.
- அவள் இறக்கும் முன் 644 காகித கொக்குகள் செய்தார்.
- அக்குழந்தையின் நினைவிடம் உள்ள இடம் ஹிரோசிமா நகரம்.
- டென் லிட்டில் பிங்கர்ஸ்(Ten Little Fingers) என்ற நூலை எழுதியவர் - அரவிந்த் குப்தா.
- இலக்கணம்:
  இன எழுத்துக்கள் (or) நட்பு எழுத்துக்கள்:
  ங்க – சிங்கம், ஞ்ச – மஞ்சள், ண்ட – பண்டம், ந்த – பந்தல், ம்ப – கம்பன், ன்ற – தென்றல்.

நாலடியார்:

- பாடியவர்கள் - சமணமுனிவர்கள்.
- இந்நூல் 400 பாடல்களைக் கொண்டது – அறக்கருத்துக்களை கூறுவது.
- சிறப்பு பெயர் - நாலடி நானூறு.
- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை அறநூல்கள்.
  குறிப்பு: சங்க இலக்கியகளுக்கு பின் தோன்றியவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்.

  பொருள்: அணியர் - நெருங்கி இருப்பவர், சேய் - தொலைவு, செய் - வயல், பதினெண் - பதினெட்டு.

பாரதியார்:

- காலம் 11-12-1882 - 11-09-1921.
- சிறப்பு பெயர்கள்: மகாகவி, தேசியகவி, பாட்டுக்கொரு புலவன்.
- பாரதிக்கு மகாகவி என பட்டம் கொடுத்தவர் - வ.ரா(ராமசாமி அய்யங்கார்)
- பாரதி தன்னை ஷெல்லிதாசன் என அழைத்துக்கொண்டார்.
- பாரதி என்பதன் பொருள் - கலைமகள்.

பாடல் வரிகள்:

"வெள்ளிப்பனிமலையின் மீது உலாவுவோம்"

"ஆயதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்"

"சாதி இரண்டொழிய வேறில்லை"

"உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்"

பொருள்:

BHARATHI STUDY CENTRE

வண்மை - கொடை, கோணி – சாக்கு, ஞாலம் - உலகம், தமிழ்மகள் - ஔவையார், உழபடை – வேளாண்மை செய்யும் பயன்படும் கருவிகள், பறப்பு – பறக்கும் விமானம் போன்றவை.

பறவைகள்:

- தமிழ்நாட்டில் பட்டாசு வெடிக்கப்படாத ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூந்தன் குளம்.
- பருவ காலத்தை மனிதர்களுக்கு உணர்த்துபவை - பறவைகள்.
- உலகம் முழுவதும் மரம், செடி, கொடிகளை பரப்புவது - பறவைகள்.
- நம் நாட்டில் சுமார் 2400 வகைப்பறவைகள் உள்ளன.
- நிலத்திலும் அதிக உப்புத்தன்மையுள்ள நீரிலும் வாழ்ந்து கடும் வெப்பத்தை எதிர் கொள்ளும் தன்மையை உடைய பறவை – பூ நாரை.
- சமவெளி மரங்களில் வாழும் பறவைகள் - மஞ்சள் சிட்டு, செங்காகம், சுடலைக்குயில், பனங்காடை, தூக்குணாங்குருவி.
- நீர் நிலைகளில் வாழும் பறவைகள் - கொக்கு, தாழைக்கோழி, பவளக்காலி, ஆற்று உள்ளான், முக்குளிப்பான், நாரை, அரிவாள் மூக்கன், கரண்டி வாயன், ஊசிவால் வாத்து.
- மலைகளில் வாழும் பறவைகள் - கிருவாச்சி, செந்தலைப் பூங்குருவி, மின்சிட்டு, கருஞ்சின்னான், நீலகிரி நெட்டைக்காலி, பொன் முதுகு, மரங்கொத்தி, சின்னக்குறுவான், கொண்டை உழவாரன், இராசாளிப்பருந்து, பூமன் ஆந்தை.

தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயங்கள்:

1)வேடந்தாங்கல் 2) கரிக்கிளி (காஞ்சிபுரம் மாவட்டம்) 3) கஞ்சிரால்குளம் 4) சித்திரஸ்குடி 5) மேலக் செல்வனூர் (இராமநாதபுரம் மாவட்டம்) 6) பழவேற்காடு (திருவள்ளூர் மாவட்டம்) 7) உதயமார்த்தாண்டபுரம் (திருவாரூர் மாவட்டம்) 8) வடுவூர் (தஞ்சை மாவட்டம்) 9) கரைவெட்டி (பெரம்பலூர் மாவட்டம்) 10) வேட்டங்குடி (சிவகங்கை மாவட்டம்) 11) வெள்ளோடு (ஈரோடு மாவட்டம்) 12) கூந்தன்குளம் (திருநெல்வேலி மாவட்டம்) 13) கோடியக்கரை (நாகப்பட்டின் மாவட்டம்).

பாம்புகள்:

- உலகில் மனிதஇனம் தோன்றும் முன் பத்துகோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இனம் - பாம்புகள்.
- பாம்புப் பண்ணை அமைந்துள்ள இடம் - சென்னைக்கு அருகே கிண்டி.
- பெரும்பாலான பாம்புகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பன.
- சில பாம்புகள் குட்டிப்போடும்.
- உலகிலேயே மிக நீளமான நஞ்சுள்ள பாம்பு – ராஜநாகம்(இந்தியா). இதன் நீளம் 15 அடி - கூடுகட்டி வாழும் ஒரே வகைப்பாம்பு – மற்ற பாம்புகளை கூட உணவாக்கிக் கொள்ளும்.
- பாம்புகளின் பற்கள் உள்நோக்கி வளைந்திருக்கும் - இரையை விழுங்கும் - மென்று தின்பதில்லை.
- பாம்பு தான் பிடிக்கும் இரையை கொல்லவும், செரிமானத்திற்காகவும் தன்னுடைய எச்சிலில் நஞ்சு வைத்திருக்கிறது.
- பாம்பிற்கு காது கேட்காது – தரையில் ஏற்படும் அதிர்வுகளை உணர்ந்து செயல்படும்.
- விவசாயிகளின் நண்பன் -
- 52 வகையான பாம்புகளுக்கு நச்சுத்தன்மை உண்டு.
- பாம்பைக் கொன்றால் அதன் உடல் பிளந்து வெளிவரும் வாசனை மற்ற பாம்புகளை அந்த இடத்திற்கு வரவைக்கிறது.
- சுற்றுப்புறத்தின் வாசனையை அறிந்து கொள்ள பாம்புகள் அடிக்கடி நாக்கை வெளியே நீட்டும்.
- நல்ல பாம்பின் நஞ்சு கோப்ராக்சின்(Cobrozin) என்ற வலி நீக்கி மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது.
- இந்திய அரசின் வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் - 1972.

இலக்கணம்:

- உடனிலை மெய் மயக்கம்
  தன் எழுத்துடன் மட்டும் சேர்ந்து வரும் - க், ச், த், ப்.
  (எ.கா) – பக்கம், அச்சம், மொத்தம், அப்பம்.

வேற்றுநிலை மெய்மயக்கம்:

BHARATHI STUDY CENTRE

www.kalvisolai.com



தன் எழுத்துடன் சேராது பிற எழுத்துக்களுடன் சேரும் எழுத்துக்கள் - ர், ழ்.

(எ.கா) – சார்பு, வாழ்க்கை.

- தன் எழுத்து பிற எழுத்து இரண்டுடன் சேர்ந்து வரும் எழுத்துக்கள – ற், ன்.

  (எ.கா) – குற்றம், மேற்கு – ற், அன்னம், அன்பு – ன்.
- உலகம் வெப்பமடையக் காரணம் - வாகனப்புகை.

- ஆறுகள் மாசடையக் காரணம் - தொழிற்சாலைக்கழிவு.
- மழை குறையக் காரணம் - காடுகள் அழிப்பு.
- மனிதர்கள் யானையை வேட்டையாடக் காரணம் - தந்தம்.
  குறிப்பு: வண்மை – கொடைத்தன்மை, வன்மை – கொடுமை.

<u>நான்மணிக்கடிகை</u>

- ஆசிரியர் - விளம்பிநாகனார், விளம்பி – ஊர் பெயர், நாகனார் - இயற்பெயர்.
- கடிகை – அணிகலன்.
- ஒவ்வொரு பாட்டும் நான்கு அறக்கருத்துக்களைக் கூறுகின்றன.
- குடும்பத்தின் விளக்கு – பெண் என்றும், பெண்ணுக்கு விளக்கு பண்பில் சிறந்த பிள்ளைகள் மனத்திற்கினிய அன்புமிக்க பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி, என்ற கருத்து இப்பாடலில் வருகிறது.

<u>பொருள்:</u>

மடவாள் - பெண், தகைசால் - பண்பில் சிறந்த, உணர்வு – நல்லெண்ணம், காதல்புதல்வர் - அன்பு மக்கள்.

<u>நாட்டுப்புறப்பாட்டு:</u>

- எழுத்து வழியாக வராமல், வாய் வழியாக பரவுகின்ற பாட்டு அல்லது தாளில் எழுதாத பாடல் நாட்டுப்புறப்பாடல் எனப்படுகிறது.
- எழுதப்படாத எல்லோர்க்கும் தெரிந்த கரைகள் வாய்மொழி இலக்கியம் எனப்படுகிறது.
- சென்னை போன்ற பெருநகரங்களில் பாடப்படும் நாட்டுப்புறப்பாடல் - கானா பாடல்.
- பிறந்த குழந்தைகளுக்கு பாடுவது – தாலாட்டுப்பாடல்.
- கொஞ்சம் வளர்ந்த குழந்தைகளுக்கு பாடுவது – விளையாட்டுப்பாடல்.
- வேலை செய்வோர் களைப்பு நீங்க பாடுவது – தொழிற்ப்பாடல்.
- திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் பாடப்பாடுவது – சடங்கு பாடல்.,கொண்டாட்டப் பாடல்.
- சாமி கும்பிடுவோர் பாடுவது – வழிப்பாட்டுப் பாடல்.
- இறந்தோர்க்கு பாடுவது – ஒப்பாரி.

<u>பொருள்:</u>

- ஆனம் - குழம்ப, அகவிலை – தானியவிலை, நாழி – தானியங்களை அளக்கும் படி.
- அறிவை வளர்க்கும் அற்புதக் கதைகள் என்ற நூலின் ஆசிரியர் - ஜானகி மணாளன்.
- சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் - நரேந்திரதத்.
- பழமொழியை சொலவடை என்றும் மக்கள் கூறுவர்.
- தமிழ் சொற்கள் - நான்கு வகைப்படும், அவை பெயர், வினை, இடை, உரி.

<u>இசையமுது.</u>

- எழுதியவர் - பாரதிதாசன்
- இயற்பெயர் - கனக சுப்புரத்தினம்

BHARATHI STUDY CENTRE

**BHARATHI STUDY CENTRE**
**TRICHY/MADURAI.**
**9894274672 ; 8682084318**

- சிறப்பு பெயர் - புரட்சிக்கவிஞர், பாவேந்தர்.
- இவரின் படைப்புகள் - பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு.
- கல்லாத பெண்களின் இழிவைக் கூறும் நூல் - இருண்ட வீடு.
- கற்ற பெண்களின் சிறப்பைக் கூறும் நூல் - குடும்ப விளக்கு.
- இயற்கையை வர்ணிக்கும் நூல் - அழகின் சிரிப்பு.
- பாரதிதாசன் நடத்திய இதழ் - குயில்.

பொருள்:

பொடி – மகரந்தப்பொடி, வானப்புனல் – வானத்து நீர்(மழை நீர்), தழையா வெப்பம் - பெருகும் வெப்பம், குறையாத வெப்பம், தழைக்கவும் - குறையவும்.

பழமொழி நானூறு:

- ஆசிரியர் - முன்றுறை அரையனார், முன்றுறை – ஊர்ப்பெயர், அரையன் -அரசனைக் குறிக்கும் சொல்.

பொருள்:

ஆற்றுணா வேண்டுவது இல் -“கற்றவனுக்கு கட்டுச்சோறு வேண்டாம்”

ஆற்றுணா – வழிநடை உணவு(கட்டுச்சோறு)

குறிப்பு: ஆறு – ஓர் எண்(6), ஆறு – நதி, ஆறு – வழி.

ஜவகர்லால் நேரு:

- நாட்டின் விடுதலைக்குப் பின் முதல் பிரதமர்.
- தாகூர் ஆரம்பித்த விஸ்வபாரதி கல்லூரி மேற்குவங்கத்தில் சாந்தி நிகேதனில் உள்ளது.
- நேரு தன் மகள் இந்திரா காந்திக்கு 42ஆண்டுகள்(1922-1964) கடிதம் எழுதியுள்ளார்.
- பாடப்பகுதியில் உள்ள கடிதம் அல்மோரா மாவட்டச் சிறையில் இருக்கும் போது 1935 பிப்22 அன்று எழுதப்பட்டது.
- நேருவின் கடிதம் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ளது. நேரு விரும்பி படித்தது – ஆங்கில நூல்கள்.

குறிப்பு:

சேக்ஸ்பியர் - ஆங்கில நாடக ஆசிரியர்.
மில்டன் - ஆங்கிலக் கவிஞர்.
பிளேட்டோ - கிரேக்கச் சிந்தனையாளர்.
காளிதாசர் - வடமொழி நாடக ஆசிரியர்(சகுந்தலம் நாடகம்).
டால்ஸ்டாய் - இரஸ்ய நாட்டு எழுத்தாளர்(போரும் அமைதியும் நாவல் - உலகில் மிகச்சிறந்த நாவல்களில் ஒன்று என இதனை நேரு குறிப்பிடுகிறார்.)
பெர்னாட்ஷா - ஆங்கில நாடக ஆசிரியர்.
பேட்ரண்ட் ரஸ்ஸல் - சிந்தனையாளர், கல்வியாளர்(நேருவுக்கு மிகவும் பிடித்த கல்விச் சிந்தனையாளர்).
கிருபாளினி - விசுவபாரதியில் பணிபுரிந்த பேராசியர்.

- நேரு மகளுக்கு எழுதிய கடிதத்தில் அதிகம் கூறியது – நூல்கள் பற்றி.

குறிப்பு:

உலகம் - ஞாலம் - புவி → பூமி.
முகில் - எழில் - கொண்டல் → மேகம்.
மன்னன் - வேந்தன் - கொற்றவன் → அரசன்.

BHARATHI STUDY CENTRE

www.kalvisolai.com



இலக்கணம்:

- ஒளியை உணர்த்தும் சொற்கள் இரண்டு இரண்டாக சேர்ந்து வருவது, பிரித்தால் பொருள் தராது. எ.கா: தணதண, சல சல, கண கண, பட பட, குடுகுடு, வளவள, பளபள.
- சித்தர்கள் - நானூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் காடு மலைகளில் வாழ்ந்தவர்கள், இவர்கள் உருவ வழிபாடு செய்யாமல் வெட்ட வெளியையே கடவுளாக வழிபட்டவர்கள்.

பொருள்:

- சித்து – அறிவு.
- கடுவெளிச் சித்தர் பாடிய பாடல்கள் - 54.
- நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன் நாடாறு மாதமாய் எனப் பாடியவர் - கடுவெளிச் சித்தர்.
- பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகினிச் சித்தர் - இவை காரணப்பெயர்கள்.

பொருள்:

வேம்பு – கசப்பான சொற்கள்.

வீறாப்பு - இருமாப்பு, கடம் - உடம்பு.

சாற்றும் - புகழ்ச்சியாகப் பேசுவது.

- கவிஞர் அப்துல் ரகுமானின் “ஆலாபனை” என்னும் நூல் சாகித்ய அகாடமி விருது பெற்றது.
- இவரின் பிற படைப்புகள், சுட்டுவிரல், பால்வீதி, நேயர் விருப்பம், பித்தன்.

பெரியார்:

- இயற்பெயர் - இராமசாமி.
- பெற்றோர் - வேங்கடப்பர், சின்னத்தாயம்மாள்.
- பிறந்த ஊர் - ஈரோடு.
- பகுத்தறிவாளர் சங்கம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றை தோற்றுவித்தார்.
- கேரளாவில் வைக்கம் என்ற ஊரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவாக போராடி வெற்றிபெற்றதால் வைக்கம் வீரர் என அழைக்கப்பட்டார்.
- தன்னைத் தானே மதிப்பதும், தன் மரியாதையை தக்க வைத்துக் கொள்வதும்- சுயமரியாதை.
- பெரியாரின் காலம்-17.9.1879 முதல் 24.12.1973
- ஐக்கிய நாடுகளின் சபையின் யுனெஸ்கோ விருது 1970 ஆம் ஆண்டு பெரியாருக்கு வழங்கப்பட்டது.
- 1978 ஆம் ஆண்டு பெரியாருக்கு அஞ்சல்தலை நடுவண் அரசு வெளியிட்டது.
- பெரியார் - பெண் விடுதலை மற்றும் தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபட்டவர்.

## புறநானூறு

நூல்குறிப்பு:

- புறநானூறு =புறம் + நான்கு + நூறு.
- தமிழர்களின் வரலாறு பண்பாடு ஆகியவற்றை அறிய உதவும் நூல்.
- இந்நூல் புலவர் பலர் இயற்றிய பாடல்களின் தொகுப்பு.

ஆசிரியர் குறிப்பு:

- ஔவையார்- சங்கப்புலவர்- அதியமானின் நண்பர்- நெல்லிக்கனியை அதியமானிடம் பெற்றவர்- சங்ககால பெண் கவிஞர்களில் அதிகப்பாடல் பாடியவர்- இவரும் ஆத்திச்சூடி பாடிய ஔவையாரும் வேறு வேறானவர்.
- ஔவை என்பதன் பொருள்- தாய்

பாடல் வரிகள்:

BHARATHI STUDY CENTRE

www.kalvisolai.com



எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை; வாழிய நிலனே- ஔவையார்

- பொருள்: அவல்-பள்ளம்; மிசை-மேடு; நல்லை-நன்றாக இருப்பாய்.
- திண்ணையை இடித்து தெருவாக்கு என்ற பாடலை இயற்றியவர்- கவிஞர் தாராபாரதி. இவர் எழுச்சிமிக்க கவிதைகளை எழுதுவதில் வல்லவர்- ஆசிரியராக பணியாற்றியவர்-தமிழக அரசின் நல்லாசிரியர் விருதுபெற்றவர்.
- காலம்: 26.2.1947-13.5.2000
- பிற நூல்கள்: புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, தாராபாரதி கவிதைகள்.

பாடல்வரிகள் சில: “கடலில் நான் ஒரு முத்து”

எத்தனை உயரம் இமயமலை-அதில்

இன்னொரு சிகரம் உனதுதலை”

பூமிப்பந்து என்ன விலை? – உன்

புகழைத் தந்து வாங்கும் விலை!

## பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்:

- பிறப்பு:

இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் எனும் ஊரில் 1908ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் நாள் பிறந்தார். தந்தை - உக்கிரபாண்டித்தேவர்; தாய் - இந்திராணி. இஸ்லாமிய பெண்மணி. இவருக்கு பாலூட்டி வளர்த்தார். இவருடைய ஆசிரியர்-குறைவற வாசித்தான் பிள்ளை.

- கல்வி:

தொடக்கக்கல்வி-கமுதியில் கிருஸ்தவ பாதிரியார்களிடம்- பசுமலை உயர்நிலைப்பள்ளி(மதுரை)-10ம் வகுப்பு ராமநாதபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில்-இராமநாதபுரத்தில் பரவிய பிளேக் நோயால் இவரது கல்வி நின்றது- தமிழ் ஆங்கிலம் இருமொழிகளிலும் வல்லவர்- சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகியவற்றை கற்றறிந்தார்.

- நிலக்கிழார் ஒழிப்பிலும் ஆலய நுழைவுப் போராட்டத்திலும் முன்னின்றார்.
- சமபந்தி முறையை ஆதரித்தார்.
- தேசியம் காத்த செம்மல் என இவரை திரு.வி.க பாராட்டியுள்ளார்.
- தேர்தலில் போட்டியிட்டு ஐந்துமுறை வெற்றி பெற்றார். (ஆண்டுகள் 1937,1946,1952,1957,1962)
- தெய்வீகம் தேசியம் இரண்டையும் இருகண்களாக போற்றியவர்.
- சிறப்பு பெயர்கள்: வேதாந்த பாஸ்கர், பிரணவகேசரி, சன்மார்க்க கண்ட மாருதம், இந்து புத்த சமய மேதை
- இவரின் கூற்றுகள்:
  1. சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை ஆண்டவன் மனித குலத்தைத்தான் படைத்தானே தவிர சாதியையும் நிறத்தையும் அல்ல சாதியும் நிறமும் அரசியலுக்கும் இல்லை ஆன்மீகத்திற்கும் இல்லை.
  2. வீரமில்லாத வாழ்வும் விவேகமில்லாத வீரமும் வீணாகும். பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு. வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு.
  3. மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் என குறிப்பிட்டுள்ளார்.
  4. இவரின் அரசியல் வழிகாட்டி வங்கச்சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். இவரின் விருப்பத்திற்கேற்ப நேதாஜி 6.9.1939 ல் மதுரை வந்தார்.
- மறைவு: 1936ம் ஆண்டு அக்டோபர் 30(பிறந்தநாள்)
- 1995ல் மத்திய அரசு இவரின் நினைவாக அஞ்சல்தலை வெளியிட்டது

BHARATHI STUDY CENTRE

**BHARATHI STUDY CENTRE**
**TRICHY/MADURAI.**
**9894274672 ; 8682084318**

- தமிழக அரசு சென்னையில் இவருக்கு சிலையும் அச்சிலை உள்ள சாலைக்கு இவர் பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

இலக்கணம்: சுட்டெழுத்துக்கள்- மனிதனையோ பொருளையோ சுட்டிகாட்ட உதவும் எழுத்தக்கள் சுட்டெழுத்துக்ள். அவை அ, இ பழங்காலத்தில் "உ" என்பதும் சுட்டெழுத்து (தற்போது பயன்படுத்துவது இல்லை)

உதுக்கண்- சற்றுத் தொலைவில் பார்

உப்பக்கம்- முதுகுப்பக்கம்

உம்பர் - மேலே

எ.கா: அப்பெண், இப்பையன், இவ்வீடு, அந்தப்பக்கம், இந்தவீடு, அ, இ சுட்டெழுத்துக்கள் தனியே நின்று சுட்டும் போது ஆண் பெண் அனைவரையும் பொதுவாக சுட்டுகின்றன.

- அகச்சுட்டு- அவன், இவன்
- புறச்சுட்டு- அப்பையன்
- சுட்டுத்திரிபு- அந்தப்பக்கம்.

தகவலை வினா ஆக்கும் எழுத்து-'ஆ'

எ.கா. அவன் செய்தான் - அவனா செய்தான்?

கேள்வி எழுப்ப உதவும் வேறு சில எழுத்துக்கள்- எ-விடை என்ன? ஏ-ஏன் வந்தாய்? யா-யார் அங்கே? யோ-நீயோ செய்தாய்?

சொல்லுக்கு அழுத்தம் தரும் உயிரெழுத்து-ஏ

(எ.கா) அவனே செய்தான், சீதையே சிறந்தவள்.

தற்போது 'ஏ' க்கு பதில் 'தான்' பயன்படுத்தும் வழக்கம் உள்ளது.

அவன் தான் சிறந்தவன்.

- பொருள்:

  ஈரம்-அன்பு, அளைஇ-கலந்து, படிறு-வஞ்சம், அகன்-உள்ளம், அமர்-விருப்பம்,செம்பொருள்-சிறந்த பொருள், துவ்வாமை-வறுமை, அல்லவை-பாவம், நன்றி-நன்மை, சிறுமை-துன்பம், ஈன்றல்-தருதல், வன்சொல்-கடுஞ்சொல், கவர்தல்-நுகர்தல்

- செய்யும் தொழிலே தெய்வம் என்ற பாடலை எழுதியவர்- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்:**

- பிறந்தஊர்- பட்டுக்கோட்டை அருகே செங்கப்படுத்தான்காடு
- காலம்-13.4.1930- 8.10.1959
- பொதுவுடைமைச் சிந்தனைகளை தம் பாடல்களில் கூறியுள்ளார்.
- சிறப்புபெயர்: மக்கள் கவிஞர்

சில பாடல் வரிகள்: செய்யும் தொழிலே தெய்வம்- அந்தத்

திறமைதான் நமது செல்வம்

"பயிரை வளர்த்தால் பலனாகும்-அது

உயிரைக் காக்கும் உணவாகும்"

"காயும் ஒரு நாள் கனியாகும்-நம்

BHARATHI STUDY CENTRE

www.kalvisolai.com



கனவும் ஒரு நாள் நனவாகும்''

- கலைகளின் விளைநிலம் எனப்படுவது சோழநாடு. வியக்க வைக்கும் கட்டிடகலையும் சிற்பக்கலையும் கொழிக்கும் ஊர் கும்பகோணம். இவ்வூரின் தென்புறம் அரிசிலாரு (தற்போது அரசலாறு) பாய்கிறது
- இவ்வாற்றில் தென்கரையில் உள்ள தாராசுரம் என்னும் ஊரில் ராசராசசோழனால் கட்டப்பட்ட ஐராவதீஸ்வரர் கோயில் உள்ளது.
- இங்குள்ள கதை சிற்பங்கள்-முப்புரம் எரித்தவன் (திரிபுராந்தகன்) கதை
- யானையை வதம் செய்து அதன் தோலைத் தன்மீது உடுத்திக்கொள்ளும் ஈசனின் யானை உரி போர்த்தவர் (காகசம்வாராமூர்த்தி) கதை
- அடிமுடி தேடவைக்கும் அண்ணாமலையார்(லிங்கோத்பவர்) கதை
- இக்கோயிலின் நுழைவுவாயிலில் 'சரிகமபதநி' எனும் ஏழுநாதப்படிகள் (சங்கீதருங்கள்படிகள்) உள்ளன.
- 63 நாயன்மார்களின் கதைகளைக் கூறும் கல்வெட்டு எழுத்துத் தலைப்புகளுடன் கூடிய புடைப்புச்சிற்பங்கள் இங்குள்ளன.
- ''கலைகளின் சரணாலயம்'' எனப்படும் இக்கோயிலை யுனெஸ்கோ அமைப்பு மரபு அடையாளச்சின்னமாக அறிவித்துள்ளது
- இங்குள்ள ஓருடல் சிற்பங்கள் சிறப்பானவை
- சமணர் கோயில் உள்ள இடம் தீபங்குடி
- பிளாஸ்டிக் (plastic)- நெகிழி,தெர்மகூல்-நெட்டி
- தாராபுரம் கோயிலின் விமானத் தோற்றத்தை பாராட்டிய வானவியல் அறிஞர்-கார்ல்சேகன் (Carlsagon)

<u>மேரிகியூரி:</u>

- போலந்து நாட்டில் 1867ம் ஆண்டு பிறந்தார்.
- அறிவியல் மேதை பியூரிகியூரியை இவர் திருமணம் செய்துகொண்டார்
- கணவருடன் சேர்ந்து பொலோனியம் என்ற தனிமத்தை கண்டறிந்தார்
- ரேடியத்தையும் அதன்அணு எடையையும் கண்டறிந்தார்.
- 1903ம் ஆண்டு இவருக்கும் அவரது கணவருக்கும் நோபல்பரிசு வழங்கப்பட்டது.
- ரேடியம் மூலம் புற்றுநோய் மற்றும் பலவகைத்தோல் வியாதிகளை குணப்படுத்தலாம் எனக் கண்டறிந்தார்.
- 1911ல் இரண்டாவது முறையாக நோபல்பரிசு வழங்கப்பட்டது
- 1934ல் இறந்தார்
- அவரது மகள் ஐரினும் மருமகன் ஜோலியட் கியூரியும் செயற்கைக் கதிர்வீச்சு பற்றிய வேதியியல் ஆராய்ச்சிக்காக 1935ல் நோபல்பரிசு பெற்றனர் (ஒரே குடும்பத்திற்கு 3 நோபல்பரிசு என்ற சாதனையை பெற்றனர்)

**<u>இலக்கணம்: செய்யுள் வழக்கு:</u>**

- செய்யுளில் ஓசைக்காகவும் அழுத்தம் தருவதற்காகவும் பயன்படுத்தப்பட்ட சொல்-கொல்
- ஒரு பெண்ணைப் பார்த்து மான்கொல்? மயில்கொல்? என்றால் இவள் மானோ மயிலோ என்று கூறுவதாகப் பொருள்.

**<u>அளபெடை:</u>** நீட்டி ஒலிப்பதை அளபெடை என்பர்.

- உயிரெழுத்து நீட்டி ஒலித்தால்-உயிர் அளபெடை (எ.கா)உப்பூஉ உஉ
- ஒற்றெழுத்து நீட்டி ஒலித்தால்- ஒற்றளபெடை (எகா) பொய்யல்
- அகராதிவரிசை: 1.அங்காடி,அண்ணி,அப்பா,அம்மா,அன்னம்
- பயிற்சிக்காக: ஆமை,ஆசிரியர்,ஆண்டு,ஆடு,ஆத்திரம்,ஆயிரம்,ஆவணி,ஆனால்,ஆறு,ஆர்வம்

**<u>ராமச்சந்திர கவிராயர்:</u>** துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர்.

- புலவர்கள் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு 'தனிப்பாடல்திரட்டு'
- பாடல்வரிகள்:

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்

BHARATHI STUDY CENTRE

www.kalvisolai.com

**BHARATHI STUDY CENTRE**
**TRICHY/MADURAI.**
**9894274672 ; 8682084318**

குடிக்கத்தான் கற்பித்தானா

<u>உடுமலை நாராயண கவி:</u>

- திரைப்பாடல் ஆசிரியர் மற்றும் நாடக எழுத்தாளர்.
- அந்த காலம் இந்தக் காலம் பாடலை பாடியவர்.
- சமுதாயப்பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துக்களை பாடியவர்.
- சிறப்ப பெயர் - பகுத்தறிவுக் கவிராயர்.
- காலம் - 25.9.1899 □ 23.5.1981

பொருள்:

பதுமத்தான் - பிரமன், பரங்குன்றுள்ளான் - திருப்பரங்குன்றத்தில் உள்ள முருகன், குரைகடல் - ஒலிக்கும் கடல்.

தமிழ் சொற்கள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டி.வி | - | தொலைக்காட்சி. | டம்ளர் | - | குவளை. |
| டிபன் | - | சிற்றுண்டி | லைட் | - | விளக்கு |
| டீ | - | தேநீர். | டைப்ரைட்டர் | - | தட்டச்சுப் பொறி. |
| ஆஸ்பத்திரி | - | மருந்துவமனை. | டெலஸ்கோப் | - | தொலைநோக்கி |
| இண்டர்நெட் | - | இணையம் | மைக்ரோஸ்கோப் | - | நுண்ணோக்கி |
| சர்வகலா சாலை | - | பல்கலைக்கழகம் | டியூப்லைட் | - | குழல் விளக்கு |
| கார் | - | மகிழ்வுந்து | காபி | - | குளம்பி நீர் |
| சைக்கிள் | - | ஈருருளி,மிதிவண்டி | மீடியா | - | ஊடகம். |

--------------------------------

பாண்டி மண்டலத்ததைச சேர்ந்த நாடுகளுள் ஒன்று – பரம்பு நாடு.

நம்மாழ்வார் பிறந்த இடம் - ஆழ்வார் திருநகரி.

விருதுநகரின் பழைய பெயர் - விருதுபட்டி

தொழில்களால் சிறப்படையும் ஊர் - பேட்டை எனப்பெறும்.

மயிலாப்பூரில் உள்ள கபாளீச்சுரம் கோவிலை திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

ஊரும் பேரும் என்ற நூலை எழுதியவர் - ரா.பி. சேதுப்பிள்ளை.

புரம் - சிறந்த ஊரைக் குறிக்கும் (எ.கா) காஞ்சிபுரம், கங்கை கொண்ட சோழபுரம்.

பட்டினம் - கடற்கரை நகரங்கள் பட்டினம் எனப் பெயர் பெறும் (எ.கா) கோடம்பாக்கம், மீனம்பாக்கம்.

புலம் - புலம் எனும் சொல் நிலத்தைக் குறிக்கும (எ.கா)மாம்புலம், குரவைப்புலம்.

குப்பம் - நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள் குப்பம் (எ.கா) காட்டுக்குப்பம், நொச்சிக்குப்பம்.

<u>**இலக்கணம்**</u>

- எழுத்துகளின் ஒலியின் அளவைக் குறிக்கும் சொல் - மாத்திரை.
- மாத்திரையின் கால அளவு – கண்சிமிட்டும் நேரம் (அ) விரல் சொடுக்கும் நேரம்.
- மெய்யெழுத்து – அரை மாத்திரை.
- உயிர் எழுத்து(குறில்), உயிர் மெய் எழுத்து(குறில்) – ஒரு மாத்திரை.

BHARATHI STUDY CENTRE

**BHARATHI STUDY CENTRE**
**TRICHY/MADURAI.**
**9894274672 ; 8682084318**

- உயிர் எழுத்து(நெடில்), உயிர் மெய் எழுத்து(நெடில்) – இரு மாத்திரை.

**குறிப்பு:**

- ஒலியின் அளவு இந்த அளவைத் தாண்டும் போது அளபெடை என்கிறோம்.

**எண்:**

- எண் இருவகை 1. ஒருமை 2. பன்மை.

**இடம்**

- தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

**அகரவரிசை:**

- சலிப்பு, சாப்பாடு, சிறுவன், செய்தி, கோளம்.

**பயிற்சிக்காக:** திண்ணை, தங்கம், துணை, தோழன், தெரு, தாழ்ப்பாள், தூண், தீ, தொழில்.

- குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் - திரிகூட ராசப்பக் கவிராயர்.
- இப்பாடலில் குற்றால மலையின் வளம் பற்றி பாடுகிறார்.

**பொருள்:**

| | | | |
|---|---|---|---|
| வானரங்கள் | - ஆண் குரங்கு, | மந்தி | – பெண் குரங்கு, |
| வான்கவிகள் | - தேவர்கள் | காயசித்தி | - மனிதர்களின் இறப்பை நீக்கும் மூலிகை |
| வேணி | - சடை | மின்னார் | - பெண்கள் |
| மருங்கி | - இடை | கோட்டு மரம் | - கிளைகளை உடைய மரம் |
| பீற்றல் குடை | - பிய்ந்த குடை | பரி | - குதிரை. |

- ஆழகிய சொக்க நாத புலவர் பிறந்த இடம் - திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தச்சநல்லூர்,
- இவரது காலம் -19ம் நூற்றாண்டு

**சிலேடை:**

சொல்லோ, தொடரோ இரு பொருள் தருமாறு பாடுவது சிலேடை எனப்படும். இதனை இரட்டுற மொழிதல் என்றும் கூறுவர்.

சொல் - மொழி – பதம் - கிளவி – வார்த்தை.

எ, யா, ஆ, ஓ, ஏ ஆகியவை வினா எழுப்பும் எழுத்துக்கள்.

ஏ – என்பது சொல்லின் முதலிலும், இறுதியிலும் நின்று வினாப் பொளைத்தரும்.

**மயங்கொலிப்பிழை:**

கள்ளும், முல்லும் - கல்லும், முள்ளும்

**NOTE: Complete Study Materials for TET and PG available**

BHARATHI STUDY CENTRE

BHARATHI STUDY CENTRE
TRICHY/MADURAI.
9894274672 ; 8682084318

BHARATHI STUDY CENTRE